**Source:** *Tamil Murasu*, p6
**Date:** 29 June 2016



தமிழ் முரசின் துணை ஆசிரியரும் பேரவையின் முன்னாள் உறுப்பினருமான திரு அழகிய பாண்டியன் 'இளையர் சித்தாந்தம்' ஆவணத் தொகுப்பை உருவாக்க உதவும் பல்கலைக்கழக மாணவர்கள் 32 பேருக்கான குறிப்பெடுப்பாளர் பயிலரங்கை மாநாட்டின் ஆலோசகர் என்ற முறையில் நடத்தினார்.

> "சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய இளம் தலைமுறையினரின் கருத்துகளையும் பரிந்துரைகளையும் தொகுத்து உருவாக்கப்படும் 'இளையர் சித்தாந்தம்' அச்சமூகத்தின் எதிர்கால மேம்பாட்டுக்கு உதவும்.
>
> **தமிழ்ப் பேரவையின் தலைவர் வி.அருள் ஓஸ்வின்**



இளைய சித்தாந்தம் ஆவணத் தொகுப்பை உருவாக்க உதவும் பல்கலைக்கழக மாணவர்கள்.
**படங்கள்: தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை**

# தமிழ்ச் சமூக மேம்பாட்டுக்கு 'இளையர் சித்தாந்தம்'

மா. பிரெமிக்கா

சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய இன்றைய இளம் தலைமுறையினரின் கருத்துகளையும் பரிந்துரைகளையும் ஒரு தொகுப்பாக ஆவணப்படுத்தவுள்ளது சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை.

உலகத் தமிழ்ப் பல்கலைக்கழக இளையர் மாநாடு 2012, சிங்கப்பூர் தமிழ் இளையர் மாநாடு 2014 ஆகியவற்றின் வரிசையில் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 23, 24 தேதிகளில் 'கிராஸ் ரூட்ஸ் கிளப்'பில் நடைபெறவுள்ள 'சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மாநாடு 2016' மூலமாக இதைச் சாதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'இளையர் சித்தாந்தம்' என்று அழைக்கப்படும் இந்தத் தொகுப்பை அமைச்சுகளுக்கும் தமிழ்ச் சமூக அமைப்புகளுக்கும் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினர் அனுப்பவுள்ளனர்.

சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால மேம்பாட்டுக்கு இந்த 'இளையர் சித்தாந்தம்' கைக்கொடுக்கும் என்று நம்புவதாகக் கூறினார் தமிழ்ப் பேரவையின் தலைவர் வி.அருள் ஓஸ்வின், 23.

16 முதல் 25 வயதுக்குட்பட்ட சுமார் 150 மேல்நிலைக் கல்வி, பல்கலைக்கழக மாணவர்களும் இளையர்களும் மாநாட்டில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எட்டு முதல் பத்துப் பேர் அடங்கிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட நெறியாளர்களின் உதவியுடன் தலைமைத்துவம், கலை மற்றும் கலாசாரம், கல்வி, சமூகச் சேவை என 4 பிரிவுகளில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்த பல அம்சங்களை இளையர்கள் ஆராயவுள்ளனர்.

நிபுணர்கள் பங்கேற்கும் பகிர்வு அங்கங்களும் கேள்வி பதில் அங்கங்களும் இம்மாநாட்டில் இடம்பெறும்.

மாநாட்டில் கலந்துரையாடப்படும் பிரிவுகளைப் பற்றிய விவரங்கள், பல தரப்பட்ட கருத்துக்கள் போன்றவை ஆவணப்படுத்தப்பட்டு மாநாட்டில் கலந்துகொள்ளும் இளையர்களுக்கு வழங்கப்படும்.

மாநாட்டின் சிறப்புப் பேச்சாளராக இலங்கையைச் சேர்ந்த 'சுராங்கனி' புகழ் சொல்லிசைக் கலைஞர் ஆர்யன் தினேஷ் கனகரத்தனம் கௌரவிக்கவுள்ளார். மேற்கத்திய தாக்கம் அதிகமுள்ள சிங்கப்பூர்ச் சூழலில் தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் போற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி 24ஆம் தேதி 11.30 மணிக்கு இளையர்களிடம் பகிர்ந்துகொள்ள இருக்கிறார் அவர்.

இரண்டு சமூக சேவைத் திட்டங்கள் உள்ளிட்ட 4 மாணவ திட்டங்கள் மாநாட்டில் அறிமுகம் காணவுள்ளன.

சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடல்களை ஆவணப்படுத்தும் திட்டம், சிங்கப்பூர்த் தேசிய நூலகத்துடன் இணைந்து இளையர்களிடையே நூல் வாசித்தலை ஊக்குவிக்கும் திட்டம் ஆகியனவும் இவற்றுள் அடங்கும்.

இந்தத் திட்டங்களை மாநாட்டில் கலந்துகொள்ளும் இளையர்கள் மேற்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடக்க நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக சிண்டாவின் துணைத் தலைவர் திரு விஸ்வா சதாசிவன், முடிவு நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கலை, கலாசாரம், இளையர் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளரான திரு பே யாம் கெங் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

உள்ளூர் இசைக் கலைஞரான இளையர் திருக்குமரனின் இசையமைப்பில் மாநாட்டுப் பாடல் வெளியீடு காணவுள்ளது.

23ஆம் தேதியன்று காலை 10 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறவிருக்கும் மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பொதுமக்கள் கலந்துகொண்டு இளையர்களுக்கு ஆதரவு அளிக்கலாம்.

ஆனால், அதனைத் தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடல்களில் இளையர்கள் பங்கேற்பர். பொதுமக்கள் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளலாம்.

24ஆம் தேதி மாலை 3 மணிக்கு நடைபெறும் நிறைவு நிகழ்ச்சியிலும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கலாம்.

## மாநாட்டின் முக்கிய அம்சங்கள்

பதிவு இலவசம். உணவு வழங்கப்படும். மேல் விவரங்களுக்கு: http://www.nustls.org/. தொடர்புக்கான கைபேசி எண்: 97506724

23/07/2016, 11.30am – 1pm
**தலைமைத்துவம்:** தமிழ்ச் சமூகம், அரசியல் தலைவர்கள் தமிழ் மொழி, சமுதாயத்துக்கு ஆற்றிய பங்கு பற்றிய கலந்துரையாடல்.
**நிபுணர்கள்:** சிண்டாவின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ராஜசேகர், சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் திரு சதாசிவம் வீரையா.

23/07/2016, 2.30pm – 4pm
**கல்வி:** மாணவர்களிடையே தமிழ்மொழிக் கல்வி ஆர்வத்தை உண்டாக்குவது தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்படும்.
**நிபுணர்கள்:** தமிழ் மொழிக் கற்றல், வளர்ச்சி அதிகாரி வேணுகோபால், தலைமை ஆசிரியர் சுப்பிரமணியம் நடேசன்

24/07/2016, 10am – 11.30am
**கலை, கலாசாரம்:** தமிழ் மொழி, கலாசாரம், நமது அடையாளம் ஆகியவற்றுக்கிடையே உள்ள நுண்ணிய உறவு ஆராயப்படும்.
**நிபுணர்கள்:** கலைஞர், வழக்கறிஞர் வடிவழகன், இன்டர் கல்சுரல் தியேட்டர் கழகத்தின் இயக்குநர் சசீதரன்

24/07/2016, 11.30am
**சிறப்பு உரை:** கலாசாரத்தைப் போற்றுவதன் முக்கியத்துவம் பற்றி சொல்லிசைக் கலைஞர் ஆர்யன் தினேஷ் கனகரத்தனம் உரை

24/07/2016, 1.30pm – 3pm
**சமூகச் சேவை:** சமூகச் சேவை மூலம் நமது சமுதாயத்தை ஒன்றிணைப்பதைப் பற்றிய கலந்துரையாடல்.
**நிபுணர்கள்:** மருத்துவர் குமரன் ராசப்பன், சிண்டாவின் தொண்டூழியர் லோகப்பிரியன்

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.